தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, ஆனி 8, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 ஜூன் 22, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி."

உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் மழையை நம்பி வாழ்கின்றன. அதுபோல மக்கள் அனைவரும் ஆட்சியாளரின் நீதி தவறாத நெறிமுறையை நம்பி வாழ்கின்றனர்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

61—

தரம் உயர்த்துதல்

***2542—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஒன்றியம், மங்கலம் கிராமத்திலுள்ள நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்தி, பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பல்லடம் தொகுதி, திருப்பூர் ஒன்றியம், மங்கலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியானது நிறைவு செய்யாததால், இப்பள்ளியைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்கால சந்ததியினர் அனைவரும் தரமான கல்வியைக் கற்க வேண்டுமென்பதற்காக பள்ளிக் கல்வித் துறைக்காக மட்டும் 17,000 கோடி ரூபாய்க்குமேல் ஒதுக்கித் தந்து, கல்வியிலே பல புரட்சிகரமான திட்டங்களைத் தந்து, நல்லாட்சி நடத்தி, மறைந்திருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

பல்லடம் தொகுதி, திருப்பூர் ஒன்றியம், மங்கலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கிட்டத்தட்ட 300—க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். இந்தப் பகுதியில், முஸ்லிம் சிறுபான்மையின மக்கள் அதிகமாக வசித்து வருகின்ற காரணத்தால், அந்த நடுநிலைப் பள்ளியை, பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதிலே ஒரு திருத்தம். பள்ளிக் கல்வித் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 17,000 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். 26,892 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

2017 ஜூன் 22]

நடுநிலைப் பள்ளியைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார். மங்கலம் பகுதியிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவிலேயே மேல்நிலைப் பள்ளி ஒன்று அமைந்திருக்கின்ற காரணத்தால், பெண்களுக்கென்று தனியாக இல்லாமல், ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலரும் படிக்கின்ற வகையில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலரும் படிக்கின்ற வகையில் உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கு பரிசீலக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முஸ்லிம் பெண்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதியாக இருப்பதால் அடுத்த கல்வியாண்டிலாவது அங்கே பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அமைத்துதர வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்லாமியப் பெண்கள் அதிகளவில் வசிப்பதாக ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தார். சிறுபான்மையின மக்கள்மீது இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டிருப்பதன் அடிப்படையில், இந்த ஆண்டில் இல்லாவிட்டாலுங்கூட அடுத்த ஆண்டு, நடுநிலைப் பள்ளிகளை பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தும்போது அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.

[2017 ஜூன் 22

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, தருமபுரி நகராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கவேண்டுமென்ற அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் கோருகின்ற அந்தப் பள்ளியானது விதிமுறைகளுக்குட்பட்டிருந்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் செயல்படும் இந்த அரசினால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நல்லாசியோடு, தரமுயர்த்தித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. ரா. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதர் தம்மை இழிவு செய்யும் மடைமையைக் கொளுத்துவோம்; ஆணுக்குப் பெண் அடிமை என்றெல்லாம் அறிவாற்றல் உடையவர்கள் எண்ண மாட்டார்கள்; வான் புகழாய் வாழ்வதற்கு மறவாது நாமும் பெண்ணினத்தை மதிப்போம் என்று, பெண் கல்வியினுடைய தூண்டா மணி விளக்காக விளங்கிய எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புகழ் பாடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நாள்தோறும், நாள்தோறும், துறைதோறும், துறைதோறும் சத்தமில்லாமல் புரட்சிகரத் திட்டங்களை அறிவித்து, மக்களின் முதல்வராய் மானுடம் போற்றுகின்ற அளவிற்குத் திட்டங்களைத் தந்துகொண்டிருக்கின்ற மாட்சிமை பொருந்திய மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். பெரம்பலூர் மாவட்டத்தில் 90–க்கும் மேற்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. ஆனால்,*

2017 ஜூன் 22]

பெண்களுக்கென்று ஓர் உயர்நிலைப் பள்ளிகூட இல்லை. அந்தப் பள்ளியிலே படித்த குன்னம் சட்டமன்ற உறுப்பினரும், நானும், முன்னாள் மாணவர்கள் என்ற முறையில் முயற்சி எடுத்து, பொது மக்களுடைய பங்குத் தொகையாக ரூ.1.00 இலட்சம் ரூபாயைச் செலுத்தி, பெண்கள் உயர்நிலைப் பள்ளி பெரம்பலூரிலே அமைய வேண்டுமென்று அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளோம். பெண்கள் உயர்நிலைப் பள்ளியை, பெரம்பலூர் நகரத்தில் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் பெருமகனார் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கென பல்வேறு சரித்திரங்களைப் படைத்தவர் நம்முடைய இதய தெய்வம், மறைந்தும் மறையாமலும் உள்ள புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவருடைய ஆட்சிக் காலத்திலேதான் பெண்களுக்காக பல்வேறு சாதனைகளைப் படைத்தார்கள். பெண்களைச் சிறந்த கல்வியாளர்களாக மாற்றுவதற்காக தொட்டில் குழந்தைத் திட்டத்திலே ஆரம்பித்து, பல்வேறு அரிய சாதனைகளை, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் பல்வேறு சரித்திர சாதனைகளை அம்மா அவர்கள் படைத்துக் காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு அம்மா அவர்களின் வழியில் நடைபெறுகிறது பெரம்பலூர் மாவட்டத்தில் 90 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. பெண்களுக்காகத் தனியாக உயர்நிலைப் பள்ளிகள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அரசு விதிகளுக்குட்பட்டு இருக்குமேயானால், இந்த ஆண்டே துவங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.*

திரு. கோ. வெங்கடாஜலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், நாங்கள் வணங்கும் குல தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி*

நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சியில் பாலக்குட்டப்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பெயரே வெங்கடாஜலமாக இருக்கின்றது. அவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் மாவட்டத்திலே இருக்கின்றார். எனவே, அது உடனடியாகப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே தனியார் பள்ளிகளுடைய ஆதிக்கம் மிக அதிக அளவில் உள்ளது. அந்த ஆதிக்கத்தை நீங்கள் கவனத்திலே கொண்டு, அரசு சார்ந்த ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை, குறிப்பாக, மழலையர் பள்ளிகளைத் துவக்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

NEET தேர்வைச் சந்திப்பதற்கு ஆங்கில வழிக் கல்வியில் பிள்ளைகளை நாம் தயார் செய்ய வேண்டியுள்ளது. மத்திய அரசு பல புதிய கல்விக் கொள்கைகளையெல்லாம் கொண்டு வந்திருக்கின்றது, உருவாக்கியிருக்கின்றது. அதற்கேற்ப நம்முடைய பிள்ளைகளை நாம் தயார் செய்கின்ற ஒரு சூழ்நிலை தற்போது உருவாகியிருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து அரசுப் பள்ளிகளிலும், கிராமத்திலிருந்து ஆரம்பித்து நகரங்கள் வரையில் அரசு மழலையர் பள்ளிகளைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2017 ஜூன் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபொழுது மழலையர் பள்ளி உருவாக்கப்பட வேண்டும் என்றும், தனியார் பள்ளிகள் அதிக அளவில் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கின்றன என்றும் குறிப்பிட்டார்கள். அங்கன்வாடி மையங்கள் மூலமாக மழலைகளுக்கு கல்வியைக் கற்றுத் தந்துகொண்டிருக்கிறோம். இந்த அரசு மீண்டும் அதைப்பற்றி பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. எங்கே மழலையர் சேர்க்கப்படுகிறார்கள் என்பதையும் இந்த அரசு கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறது.* L.K.G., U.K.G., *என்று சொல்லப்படுகின்ற கல்வியை தனியார் பள்ளிகளில் பெறுவதில் செலவு அதிகமாவதால், பல பேர் கடன் சுமையைத் தாங்காமல் தவித்துக்கொண்டிருக்கிற நிலை இருக்கிறது என்பதை அரசு கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, அதை எப்படி மாற்றியமைக்கலாம், எப்படி மழலையருக்கு குறைந்த செலவில் ஆங்கில வழிக் கல்வியைக் கற்றுத் தரலாம் என்பதற்கு இந்த அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. அரசு சார்ந்த ஆரம்ப, நடுநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை உருவாக்க வேண்டுமென்று இங்கே சொன்னார்கள். அதற்காக இந்த அரசு உரிய நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கல்வித் துறை தொடர்பாக பல்வேறு திட்டங்கள் இந்த மாமன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டங்கள் அனைத்தையும் நடைமுறைப்படுத்தும்போது, தனியார் பள்ளிகளில் சேர்கின்ற மாணவர்களின் சேர்க்கையைக் காட்டிலும், உங்களைப் போன்றவர்களின் பரிந்துரையைப் பெற்று, அரசுப் பள்ளிகளில் அதிகளவில் மாணவர்கள் சேருகின்ற நிலை தமிழ்நாட்டில் மிக விரைவில் உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. இராமலிங்கம் அவர்கள்.*

திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் இருக்கின்ற சித்தோடு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமாறு அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் கேட்டதற்குப் பிறகு நான் என்ன சொல்வது, செய்தே ஆக வேண்டும், செய்து முடிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எஸ். முத்தையா, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

62—

நியாய விலைக் கடை

***10044— டாக்டர் எஸ். முத்தையா:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம், அரியகுடி கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, பரமக்குடி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில், அரியகுடி பகுதியில் 505 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வரும் நிலையில், புதிய நியாய விலைக் கடை